(**2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

மாணவ-மாணவியருக்கு மட்டும்) **SUBJECT CODE** **25 UTM 204**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

## **பகுதி** – 3

அற இலக்கியமும் சிற்றிலக்கியமும்

### பகுதி – அ (**10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1) காலத்தால் அழியக்கூடிய செல்வம் எது?

அ)பொருள் ஆ)கல்வி இ)இன்பம் ஈ)அறம்

2) ஒழுக்கம் தவறாதவர்களின் கொள்கையாக ஆசாரக்கோவை கூறும் அறங்கள் எத்தனை?

அ)ஐந்து ஆ)ஏழு இ)எட்டு ஈ)ஒன்பது

3) ஏலாதி குறிப்பிடும் மருத்துவப் பொருட்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ)இரண்டு ஆ)நான்கு இ)ஆறு ஈ)எட்டு

4) கலம்பகம் என்பதன் பொருள் யாது?

அ)கலப்பு ஆ)கலவை இ)கலம் ஈ)உறுப்பு

5) கீழ்க்காண்பவற்றில் நாடக இலக்கியமாக அறியப்படுவது எது?

அ)தூது ஆ)பரணி இ)கலம்பகம் ஈ)பள்ளு

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6) மெய்ப்பொருள் காணும் வழி யாது?

7) ‘கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்’ - இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

8) இனியவை நாற்பதின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

9) ‘மானவன்’ – பொருள் தருக.

10) குற்றாலக் குறவஞ்சியில் குறிப்பிடப்படும் இரண்டு தெய்வங்களைக் குறிப்பிடுக.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

பகுதி - ஆ

அனைத்து வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடை தருக. ( 5 X 5 = 25 மதிப்பெண்கள் )

11. அ) நாலடியார் கூறும் 'சினம்' பற்றிய செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) 'காலம் அறிதலை' த் திருக்குறள் வழி விளக்குக.

12. அ) பழமொழி நானூற்றின் கருத்துக்களை நயம்பட எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) சிறுபஞ்சமூலம் - பெயர்க்காரணம் மற்றும் அதன் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுக.

13. அ) இனியவை நாற்பது தரும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) மூதுரை குறிப்பிடும் மேன்மக்கள் இயல்பை விளக்குக.

14. அ) தமிழின் சிறப்புகளைத் தமிழ்விடுதூதின் வழி நின்று சுட்டுக.

(அல்லது)

ஆ) கையறுநிலை – விளக்குக.

15. அ) குற்றாலத்தின் நாட்டுவளம் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) இளைய பள்ளி மற்றும் மூத்த பள்ளி பற்றி குறிப்பு வரைக.

பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை அளவில் விடை தருக. (K4(Or) K5)

16. அ) நடுவுநிலைமை, ஒழுக்கமுடைமை – ஆகியனவற்றை விவரித்தெழுதுக.

(அல்லது)

ஆ) கல்வி எனும் அதிகாரத்தை நாலடியார் வழி நின்று விவரி.

17. அ) நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) மருத்துவ நூல்களில் ஒன்றான திரிகடுகத்தின் கருத்துக்களை தொகுக்க.

18. அ) ஏலாதியின் செய்திகளை விவரி.

(அல்லது)

ஆ) மூதுரையின் கருத்துக்களைத் தெளிவுறுத்துக.

19. (அ) கலிங்கத்துப்பரணி குறிப்பிடும் தேவியைப்பாடியது, பேய்களைப் பாடியது - விவரி.

(அல்லது)

ஆ) நந்திக்கலம்பகத்தால் அறியலாகும் மன்னனின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

20. அ) குற்றாலக் குறவஞ்சியில் வரும் குறி சொல்லும் முறையை விளக்குக.

(அல்லது)

ஆ) முக்கூடற்பள்ளு குறிப்பிடும் இயற்கை வளங்கள் பற்றி விவரி.



*******